# Summaries in Tamil

**பேர்மாவின் அகதி உளவளத்துணையாளர்களை இந்தியாவில் பயிற்றுவித்தல்**

*Kerrie James*

*இந்த கட்டுரையானது அகதி நிலைப்பாட்டில் பயிற்சிப்பட்டறையொன்றில் உளவளத்துணைபற்றி கற்பித்தல் அணுகுமுறையைப்பற்றி விபரிக்கின்றது.* இந்த பயிற்சியானது பேர்மாவில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது டெல்கி மற்றும் அசாவில், மிசோரத்தில் வாழ்கின்ற சமூக நிறுவனங்களில் இருந்து எடுக்கப்பட்ட பங்குபற்றுனர்களுக்காக உருவாக்கப்பட்டது. இந்த கட்டுரையானது 5 நாள் உளவளத்துணைப் பயிற்சி பற்றி விபரிக்கின்றது. இது 2007ம் ஆண்டில் இருந்து ஒவ்வொருவருடமும் அகதிகளுக்கான உரிமை நிலையம் (அவுஸ்திரேலியா) வினால் பேர்மாவில் இருந்து வந்த அகதிகளுக்காக நடாத்தப்படும் பயிற்சிப்பட்டறைகளின் ஒரு பகுதியாகும். உளவளத்துணைப் பயிற்சியின் உள்ளடக்கங்கள் குறிப்பிடப்பட்டு காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அகதி நிலைப்பாட்டில் இப்பயிற்சியினை செய்ய எழுத்தாளரின் அனுபவமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** உளவளத்துணை பயிற்சிப்பட்டறை, நகர்ப்புற அகதிகள், பேர்மா (மியன்மார்) இந்தியா, சமூக அபிவிருத்தி

---

**இனங்களுக்கிடையிலான குழுக்களுக்கான உளசமூகத் தேவைகள் : பொஸ்னியா மற்றும் ஹேசிகோவினாவிற்கான மீள் இணக்கப்பாட்டு நடவடிக்கைகளுக்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள்**

*Charlotte M.L. Freeman*

தற்கால பொஸ்னியா பரந்துபட்ட இனப்பிரிவுகளினால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை 1995 டேயிரன் சமாதான உடன்படிக்கையினால் வலுவடைந்து பொஸ்னிய யுத்தமானது முடிவிற்கு வந்தது. இதன்விளைவாக தொடர்புகள் குறைந்து இன வேறுபாடுகள் வலுவடைந்தன. தொடர்பாடுகள்சார் எடுகோள்களை பாவித்தல், இது சமூக உளவியல் துறையில் உருவாக்கப்பட்டது, இந்த கட்டுரையானது மீள் இணக்கப்பாட்டு செயற்பாடுகளின் பிரதானமான பகுதி இனங்களுக்கிடையிலான குழுக்கள் என்பதனை வலியுறுத்துகின்றது. அத்துடன் பொஸ்னிய சூழலில் உள்ள சவால்களையும் கவனத்திலெடுக்கின்றது.

எழுத்தாளர் பொஸ்னியாவில் இனங்களுக்கிடையில் அர்த்தமுள்ள தொடர்புகளை ஏற்படுத்த 3 நடைமுறைச்சாத்தியமான முறைகளைப் பிரேரிக்கிறார். 1). இலக்கினை அடையுமுகமாக கலாச்சார இடைத்தொடர்புகளில் ஆர்வமான குழு ஒன்றினை உருவாக்கலும் ஆதரவு கொடுத்தலும். இக்குழு வேறுபட்ட இன அங்கத்தவர்களுக்கிடையில் ஒரு ஒத்த அடையாளத்தை ஏற்படுத்தும். 2). '*மற்றவர்களின்*' கலாச்சாரம் பற்றிய அறிவினைக் கூட்டுதல், உதாரணமாக இளைஞர்களுக் கலாச்சார இடைத்தொடர்புகள் கல்வியினூடாக, 3). சமூகத் தலைவர்களுக்கு இனங்களுக்கிடையிலான பிரச்சினை தீர்த்தல் பயிற்சிப்பட்டறைகள், இதனை குறைநிரப்புவதற்கு ஏலவே சமூகங்களில் குரல்கொடுக்க முடியாது இருக்கும் அங்கத்தவர்களுக்கு சமூகத் தொடர்பாடல் பயிற்சியினை வழங்கல. இவ்வாறான இடையீடுகள் இறுதியில் பொஸ்னியாவில் இனங்களுக்கிடையில் மீள் இணக்கப்பாட்டினை உருவாக்க வழிவகுக்ககூடியதாக இருக்கும்.

**முக்கிய சொற்பதங்கள்:** மீள் இணைத்தல், பொஸ்னியா மற்றும் ஹேர்சிகோவினியா, சமூக உளவியல், இனங்களுக்கிடையிலான குழுக்களுக்கிடையிலான உறவு தொடர்பு சார் எடுகோள், (contact hypothesis)உளசமூக இடையீடுகள்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

## லைபேரியாவில் முன்னைய (பழைய) சிறுவர் போராளிகளை மீண்டும் உள்ளிணைத்தல் பரிசோதனை முறையொன்று

*Bosede Awodola*

லைபேரியன் போராட்டத்தின் மிகப்பெரிய ஒரு அம்சம் சிறுவர் போராளிகள் அதிகளவில் பாவிக்கப்பட்டதாகும். 2003 ம் ஆண்டில் யுத்த முடிவில் ஆயிரக்கணக்கான பழைய சிறுவர் போராளிகளுக்கு உடனடியான பொருளாதார வலுவூட்டல், சமூக மற்றும் உளசமூக ஆதரவு தேவைப்பட்டது. இந்தக் கட்டுரையானது பல பங்குதாரர்களால் இந்தச் சிறுவர்களுக்க ஆதரவு கொடுப்பதற்காக அமர்த்தப்பட்ட பல் வகைப்பட்ட முறைகளைப்பற்றி ஆராய்கின்றது. இந்தக் கற்கையானது லைபேரியாவில் கள ஆராய்வாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இது நேரடியான அவதானிப்பு மற்றும் பல பங்குதாரர்களுடன் நேர்முகம்காணல், பழைய சிறுவர் போராளிகளுக்கான கேள்விக் கொத்துக்களையும் உள்ளடக்கியிருந்தது. லைபேரியாவில் பழைய சிறுவர் போராளிகளை மீள உள்ளிணைத்தல் முறையில் கல்விக்கான ஆதரவு, திறன் விருத்தி, மற்றும் குடும்பங்களுடன் மீளச்சேரல் என்பன முக்கிய முறைகளாக இருந்தன. இந்த முறைகள் பல சவால்களை எதிர்கொண்டன. உதாரணமாக நிதி, கல்வித்துறையில் போதுமனாளவு கட்டுமானங்கள் இன்மை, பழைய சிறுவர் போராளிகளுக்கு ஆதரவுகொடுப்பதற்கு குடும்பங்களுக்கு போதுமானளவு பொருளாதார வசதியின்மையும் நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் செயற்திறனற்ற தொடர் கண்காணிப்பு முறைகளும். பழைய சிறுவர் போராளிகளை அவர்களுடைய உடனடிக் குடும்பங்களுடன் மீள் இணைப்பதற்கு கல்வித்துறைக்கு போதுமானளவு நிதியினை ஏற்படுத்துதலும், மீள் இணைத்தல் திட்டத்தில் ஏழைக்குடும்பங்களுக்கு போதுமானளவு வசதிகளை ஏற்படுத்தலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** மீண்டும் உள்ளிணைத்தல், சிறுவர் போராளிகள், லைபேரியா

## சிறுவர்களுக்கான உளசமூக இடையீடுகளுக்குரிய பங்குபற்றலினூடான மதிப்பீடு : வடக்கு உகண்டாவில் ஒரு முன்னோடிக் கற்கை

*Lotte F. Claessens, Donatien C. de Graaff, Mark J.D. Jordans, Frits Boer & Tom van Yperen*

கடந்த தசாப்த்தங்களில் ஆதாரம்சார் செயன்முறைகள் மனிதநேய பணிக்களத்தில் பல நுண்ணிய அணுகுமுறைகளை தொழில்முறை செயற்பாடுகளில் தோற்றுவித்தன. பல நிறுவனங்கள் தங்களது திட்டத்தின் விளைவுகளையும் இடையீடுகளின் திறன்தன்மையினையும் ஆராய ஆழுமையையும் வளங்களையும் கூட்டுகின்றன. உளசமூக இடையீடுகளை மதிப்பீடு செய்யும்பொழுது பணியாளர்களும் ஆராய்வாளர்களும் பொதுவாக இடையீடுகளின் வெளியீடுகளின் மட்டும் ஆர்வமாக இருப்பதில்லை, கூடவே திறன்தன்மையில் ஆதிக்கம் செலுத்தும் வெளிக்காரணகளிலும், பயனாளிகளிலும் இடையீடுகளின் படிமுறைகளிலும் ஆர்வமாக இருப்பார்கள். இதற்கு (கலாச்சாரம்) களநிலையினை கருத்தில் கொண்டதும், தகவல்களை சேகரித்து பங்குபற்றுனர்கள் தங்களது கருத்துக்களை பிரதிபலிக்ககூடிய சட்டவரைபைக் கொடுக்ககூடிய செயன்முறைரீதியான அணுகுமுறை தேவை. இந்தக் கட்டுரையானது வோர் சையில்ட் - கோலண்ட் தனது I DEAL, உளசமூக வாழ்க்கைத்திறன் திட்டத்தினை மதிப்பீடு செய்ய பங்குபற்றலினூடான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறையினை எவ்வாறு உருவாக்கியது என்று விளக்குகின்றது. இதன் நோக்கம் சிறுவர்களை முதன்மை தகவல் தருனராக வைத்து தகவல்களைத் திரட்டி செயற்பாட்டினை மதிப்பிடுவதாகும். பங்குபற்றலினூடான கண்காணிப்பும் மதிபீட்டு முறையும் பல தர மற்றும் தகவல் அடிப்படையிலான அளவீடுகளை கொண்டது. உதாரணமாக தனிப்பட்ட இலக்கினை வகுத்தல், கருப்பொருள் சார் கேள்விகள், மாதிரி மதிப்பீடு, மற்றும் விளைவுகளை குறித்தல் போன்றன. இந்த முறையானது 510 பிள்ளைகளுடன் முன்னோடி



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

பார்க்கப்பட்டது. அத்துடன் 120 பெற்றாருடனும் வடக்கு உகண்டாவில் முன்னோடி பார்க்கப்பட்டது. இதனூடாக பங்குபற்றலினூடான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறை பிள்ளைகளை அர்த்தமுள்ள முறையில் மதிப்பீட்டில இணைத்துக்கொள்வதற்கும் ஆதாரம் சார் மதிப்பீட்டு முறையினை வலுப்படுத்தவும்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுவது கண்டறியப்பட்டது. ஆயினும் கூடுதலான தகவல்களை திரட்டுவது இந்த முறையினை மேலும் விரிவுபடுத்தாமல் செய்வது கடினம் என்பதும் தெரியவந்தது.

**முக்கிய சொற்கள்:** பங்குபற்றலினூடான கண்காணிப்பும் மதிப்பீடும், உளசமூக வாழ்க்கைத் திறன்கள், சிறுவர்கள், வடக்கு உகண்டா ஆதாரங்கள் அடிப்படையிலான செயன்முறை

---

**கள அறிக்கைகள் (சகபாடிகளினால் மீள்பார்க்கப்படாதவை)**

**சோமாலி நாட்டில் செயற்பாடுகளை பலப்படுத்த புதுமையான முறையில் மனநல சேவைகளை சுகாதார அமைப்புகளுடன் ஒன்றிணைத்தல்**

*Rebecca Syed Sheriff & Susannah Whitwell*

சோமாலி பெருநிலப்பரப்பு ஆபிரிக்காவின் கொம்புப்பகுதியில் அமைந்திருக்கின்றது, 1991 இல் சோமாலியாவில் இருந்து சுதந்திரம் பெற்றது. ஆயினும் இன்னும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. சோமாலி பெருநிலப்பரப்பு குறிப்பிடும்படியான வகையில் நொய்ந்த சுகாதார அமைப்பினையும் தரம்குன்றிய சேவைகளையும், பெரும்படியான மனநலத் தேவைகள் இருந்தும் மனநலத்துறைக்கான ஆளணிப்பற்றாக்குறையினையும் கொண்டிருக்கின்றது. மனநலத்துறையானது சர்வதேச சுகாராத இணைப்பொன்றுடன்-கிங்ஸ் கொலிஷ் இலண்டனுக்கும் சோமாலி பெருநிரப்பரப்பிலுள்ள அமைப்புகளுக்குமிடையில் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சோமாலி பெருநிலப்பரப்பினுள் மனநல திறன்கள் மற்றும் ஆழுமைகளை பலப்படுத்துமுகமாக, குறிப்பாக மனநோய் வைத்தியர்கள், விசேட பயிற்சி பெற்ற மனநல தாதியர்கள் பொது சேவைகளில் பணியாற்றாத ஒரு நிலைமையில், மனநல சேவைகளை ஏலவே இருக்கின்ற அமைப்புகளில் ஒன்றிணைக்கு முகமாகத் தெரிவுசெய்யப்பட்ட கனிஷ்ட வைத்தியர்கள் (உள்ளக பயிலுனர்கள்) மனநல பிரதிநிதிகளாக வருவதற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள். எழுத்தாளர்கள் ஆள்ச்சேர்ப்பு, வகிபங்குகள், குறிப்பிட்ட உத்தியின் பலங்கள், குறைபாடுகள் என்பனபற்றி விரிவாக விளக்குகின்றார்கள்.

**முக்கிய சொற்பதங்கள்:** சோமாலி பெருநிலப்பரப்பு, ஆபிரிக்காவின் கொம்புப் பகுதி, மனநல சேவைகள், சுகாதார அமைப்புகளைப் பலப்படுத்தல், ஆழுமைக் கட்டியெழுப்பல்

---

**களப்பணியாளர்களுக்கு புதிய WHO மனநல இடையீடுகளுக்கான வழிகாட்டல் கையேட்டினை எவ்வாறு கடத்துவது?**

*Roos Korste*

குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகளில் மனநல சேவைகளை அடையக்கூடிய அளவினை கூட்டுமுகமாக உலக சுகாதார நிறுவனமானது மனநல சேவைகளில் உள்ள குறைகளுக்கான இடையீட்டு வழிகாட்டல் கையேட்டினை உருவாக்கியுள்ளது. (mental health Gap Action Plan Intervention Guide (mhGAP-IG)). இந்ந செயன்முறைக் கையேடு விசேட நிபுணத்துவமற்ற பணியாளர்களையும் மன, நரம்பு, மற்றும் போதைவஸ்த்து பாவனை சம்மந்தமான பிரச்சினையுள்ள மக்களுக்கான சிகிச்சைசார் முடிவுகளை எடுக்க உதவி செய்யுமுகமாக உருவாக்கப்பட்டுள்ளது. உலகின் அனைத்து மூலைகளிலும் இதனை நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்ந்தும் சவாலாகவே இருந்து வருகின்றது. இந்த கட்டுரையானது கையேடு சாத்தியமான பாவனையாளர்களுக்கு கடத்தப்படக்கூடிய பல்வேறு வழிவகைகளின் சுருக்கத்தினைத் தருகின்றது ‘பாரம்பரியமான’ பயிற்சி முறைகள் அதாவது கையேடினை வழங்குதல் அல்லது நேருக்கு நேரான பயிற்சி போன்றவை ஏனைய



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

இலத்திரனியல் முறைகளினால் அதாவது இ-கற்றல், ஸ்மாட் போன் அப்பிளிசேஷன்ஜஸ், SMS, அல்லது வொயிஸ் பிளட்போம், போன்ற முறைகளினால் மேம்படுத்தப்படல் வேண்டுமென எழுத்தாளர் வாதாடுகின்றாா. உலக மனநல துறையினுள் இவ்வாறான புதிய, இலகுவான குறைந்த தொழில்நுட்ப முறைகள் பெரிதும் பாவிக்கப்படுவதில்லை. ஆயினும் மற்றய சுகாராத் துறைகளில் சிலசமயங்களில் புத்தாக்க இலகுவான உதாரணங்களை காணக்கூடியதாக இருக்கலாம்.

**முக்கிய சொற்பதங்கள்:** உலக மனநலம், அளவினைக் கூட்டுதல், இ- கற்றல், எம்-கற்றல், பயிற்சி

---

**ஊழியர் பராமரிப்பிற்கான மாதிரி ஒன்றை தனிநபர் நெருக்கீட்டிற்கு அப்பால் உருவாக்கல், ஒரு சம்பவக் கற்கை**

***Guus van der Veer, Felician Francis & Ananda Galappatti***

இந்த கள அறிக்கையானது இலங்கையின் வடக்கில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களில் நடந்த இடையீடுகளில் இனம்காணப்பட்ட உள்நாட்டு மனிதநேயப்பணியாளர்களில் நிதிதருனர் சார் மற்றும் முகாமையால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கீடுகளுக்கான உதாரணங்களை விபரிக்கின்றது, எழுத்தாளர்கள் ஒரு புதிய அணுகுமுறையினை இங்கு விபரிக்கின்றார்கள், அத்துடன் (தேவையற்ற) வேலைப்பழுவினால் நெருக்கீட்டிற்கு உள்ளான பணியாளர்களின் தேவைகளுக்கு தனிநபர் மையப்படுத்தப்பட்ட நெருக்கீடு கையாளல் பயிற்சி பொருத்தமான அல்லது போதுமான விடையாக இருக்காது என்ற முடிவினையும் கூறுகின்றார்கள். மேலும், பணியாளர்கள் தங்களது சேமநலனை பராமரிக்க தங்களது கலாச்சார சூழலில் பொதுவாகக் காணப்படும் சமூக ஆதரவினை பாவித்து தாமாகவே திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் கூறுகின்றார்கள்.

**முக்கிய சொற்பதங்கள்:** ஊழியர் பராமரிப்பு, நெருக்கீட்டைக் கையாளல் பயிற்சி, நிதிதருனர் சார் நெருக்கீடுகள், முகாமையால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கீடு, உளவியல் முதலுதவி



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.